# மட்/கறு/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| | | |
|---|---|---|
| **தரம் - 07** | **கணிதம்** | **நேரம்: 2 மணித்தியாலயம்** |
| **பெயர்/சுட்டெண் :** | | **புள்ளிகள் :** |

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**


1. சதுரமொன்றுக்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உண்டு?

2. பெறுமானம் காண்க. $5+7\times2$

3. சுட்டி வடிவில் தருக. $3\times3\times3\times3\times3\times7\times7$

4. 2019 ஆம் ஆண்டு எத்தனையாம் சகாப்தம் ஆகும்.

5. சுருக்குக. $9 + (-4)$

6. 

உருவிலுள்ள கோணத்தை இனங்கண்டு பெயரிடுக.

7. $\frac{7}{12} - \frac{1}{12}$ ஐ சுருக்கி எளிய வடிவில் தருக.

8. $3.25 \times 100$ இன் பெறுமானத்தைக் காண்க.

9. $m = 5$ எனில் $2m + 1$ இன் பெறுமானத்தைக் காண்க.

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

10. 3095g ஐ kg, g இல் தருக.

11. 3p+2 = 14

12. உருவிலுள்ள செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.




13. கனவுரு ஒன்றின் நீளம் 9cm, அகலம் 7cm உயரம் 5cm எனின் அதன் கவளவைக் காண்க.

14. நீர்த்தாங்கி ஒன்றிலிருந்து 500லீற்றர் நீரில் வீட்டுத் தேவைகளுக்காக குறிப்பிட்ட அளவு நீர் பயன்படுத்தப்பட்ட பின், தாங்கியில் 125 லீற்றர் நீர் எஞ்சியிருந்தால் பயன்படுத்தப்பட்ட நீர் எத்தனை லீற்றர் ஆகும்.

15. இடைவெளி நிரப்புக. 5 : = □ 10 : 14

Education கல்வி அதியாபன

16. $\frac{13}{25}$ ஐச் சதவீதமாக்குக.

17. ஒழுங்கான திண்மமொன்றின் முகங்களின் எண்ணிக்கை 6ஆகவும் உச்சிகளின் எண்ணிக்கை 8 ஆகவும் உள்ள போது ஒயிலரிக் தொடர்பைப் பயன்படுத்தி விளிம்புகளின் எண்ணிக்கையைக் காண்க?

18. நீளம் 200cm உம் அகலம் 1m உம் மேசையொன்றின் ஆகும். மேசையின் நீளத்திற்கும் அகலத்திற்கும் இடையிலான விகிதம் யாது?

19. தாயக்கட்டை ஒன்றை உருட்டும்போது நடைபெறக்கூடிய நிகழ்ச்சியின் பேறுகளை எழுதுக.

20. 79 □ 4 என்னும் எண்ணின் இலக்கச்சுட்டி 3எனின் இடைவெளியில் வரவேண்டிய எண் யாது?



kalvi.lk

பகுதி - II

- முதலாம் வினாவுக்கும் 4 வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்க.

01. ஆள்கூற்றுத்தளம் என்னும் பாடத்திற்காகச் செய்யப்பட்ட செயற்பாட்டின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

(a) i. x அச்சு வழியே 10 அலகுகளும் y அச்சு வழியே 10அலகுகளும் கொண்டதாக ஆள் கூற்றுத்தளமொன்று வரைக.

ii. நீர் வரைந்த ஆள்கூற்றுத் தளத்தில் பின்வரும் ஆள்கூறுகளைக் குறித்து, முறையாக இணைக்க.

A (2, 4), B (8, 4), C(8, 8), D(2, 8)

iii. இணைத்துப் பெற்ற உருவின் சமச்சீர் அச்சுக்களை வரைக.

(b) மைதானமொன்றின் நீளம் 100m அகலம் 80m ஆகும். 1:2000 என்னும் அளவிடையில் அம் மைதானத்தின் அளவிடைப்படத்தை வரைக.

(c) i. 4cm ஆரையுடைய வட்டமொன்று வரைக.

ii. பக்கமொன்றின் நீளம் 5cm ஆகவுள்ள சமபக்க முக்கோணி ABC ஐ அமைக்க.

02. வரையறுக்கப்பட்ட மூலகங்களைக் கொண்ட கூட்டம் தொடை எனப்படும்.

(a) i M = { a, e,i, o, u} என்றும் தொடையை சொற்களில் விபரித்து எழுதுக.


ii A = {இரண்டு தொடக்கம் பத்து வரையிலான இரட்டை எண்கள்} என்னும் தொடையின் மூலகங்களை எழுதுக.

iii தொடை A ஐ வெண்ணுருவில் குறிக்க.

(b) i விரித்தெழுதுக. $4a^3b^2$

ii. a = 2, b = 3 ஆகும் போது $4a^3b^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

03. மூன்று தவணைப் பரீட்சைகளில் ஒரு மாணவன் கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் மூன்று தவணைகளிலும் பெற்ற புள்ளிகள் கூட்டுச் சலாகை வரைபில் காட்டப்பட்டுள்ளது.






kalvi.lk

i. மூன்று தவணைகளிலும் புள்ளி அதிகரிப்பைக் காட்டும் பாடம் எது?

ii. எப்பாடத்தில் மூன்று தவணைகளிலும் புள்ளி குறைவடைந்து கொண்டு செல்கின்றது?

iii. முதலாந் தவணையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும் 3 ஆம் தவணையில் பெற்ற மொத்த புள்ளிகளுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

iv. இரண்டாந் தவணையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடம் எது?

04. (a) i. கூட்டுக. $1\frac{1}{2} + 3\frac{3}{5} + 2\frac{1}{5}$

ii. கழிக்க. $2\frac{1}{5} - 1\frac{1}{7}$

iii. $2\frac{3}{5}, 2\frac{1}{7}, \frac{5}{3}, \frac{1}{2}$ ஆகிய பின்னங்களை ஏறு வரிசையில் எழுதுக.

b. சதவீதமாக மாற்றுக.

i. $\frac{1}{5}$ ii. 0.25

c. பின்வரும் சதவீதங்களை பின்னமாகக் காட்டுக.

(i) 35% (ii) 73%

d. 1, 2, 3, 4, 5, 6 என இலக்கமிடப்பட்டிருந்த தாயக்கட்டையொன்றை ஒரு முறை உருட்டிவிடும் போது இரட்டை எண் பெறப்படுவதற்கான நிகழ்வு நடைபெறலாமா? அல்லது நடைபெறாதா?

05. (a). i. சமுர்த்தி பயனாளிகளுக்கு ஒருவருக்கு 12Kg 750g வீதம் அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டது எனின், அவர்களில் 5 பேருக்கு வழங்கப்பட்ட அரிசியின் மொத்தத் திணிவு யாது?

ii. புத்தகமொன்றின் திணிவு 1Kg 250g அவ்வாறான 4 புத்தகங்களின் மொத்தத் திணிவு யாது?

iii. கடையொன்றில் 100Kg சீனி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. அதில் 95Kg 25g சீனி விற்பனை செய்யப்பட்டிருந்தால், மீதமாகவுள்ள சீனியின் திணிவு யாது?

(b). i. கூட்டுக.

| l | ml |
|---|---|
| 75 | 950 |
| + 82 | 764 |
| | |


ii. 248l 600ml ÷ 8




kalvi.lk

06. (a). பரப்பளவைக் காண்க.


i.




ii.




iii.




35cm நீளமும் 25cm அகலமும் கொண்ட செவ்வக வடிவ தகட்டிலிருந்து உருவில் காட்டியவாறு 20cm நீளமும் 10cm அகலமும் கொண்ட செவ்வக வடிவமான தகடு அகற்றப்பட்டால் நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க.

iv. மேலுள்ள உருவில் காட்டியவாறு 20cm நீளமும் 10cm அகலமும் கொண்ட செவ்வக வடிவமான தகடு அகற்றப்பட்டால் நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க.

(b) i. கனவுரு ஒன்றின் நீளம் 12cm உம் அகலம் 6cm cm உயரம் 3cm உம் ஆகும். அதன் கனவளவைக் காண்க.

ii. மேலே (i) இல் பெற்ற கனவளவுக்குச் சமமான கனவளவையுடைய சதுரமுகி ஒன்றின் ஒருபக்க நீளம் யாது?



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



**TAMIL MEDIUM**
850/= Monthly

**ENGLISH MEDIUM**
1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page